# THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARANI.

## S.C.No.58/2014

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.10** |
| **Name** | **:** | திரு.விஜயகுமார் |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.08.2022.**

முதல் விசாரணை -

நான் பெரியகொழப்பலூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் பெரியகொழப்பலூரில் ஸ்டுடியோ வைத்திருக்கிறேன். 2012ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை ஆய்வாளரும் உதவி ஆய்வாளரும் வினாயகபுரத்தில் ஒரு பாதி தூர்ந்தநிலையில் உள்ள திறந்தவெளி கிணற்றில் தண்ணீர் இல்லை. அந்த கிணற்றில் ஒரு குழந்தை இறந்தநிலையில் தலையில் ரத்தம் கசிந்த நிலையில் இருந்ததை நான் 5 கோணத்தில் எடுக்க சொன்னதை புகைப்படம் எடுத்தேன். பிரேதம் இருந்த இடத்திற்கு அருகில் கிணற்றில் ரத்த கறை இருந்தது. எடுக்கப்பட்ட புகைப்படத்தை சி.டி. உடன் புகைப்படம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் நான் எடுத்த புகைப்படங்கள். சி.டி. புகைப்படத்துடன் கொடுக்கப்பட்டது தான். புகைப்படம் எண்ணிக்கை-5 சான்று பொருள் 6. சி.டி. எண்ணிக்கை-2 சான்று பொருள் 7. இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

புகைப்படம் எடுத்ததற்கும் சி.டி. கொடுத்ததற்கும் ரசீது கொடுத்தேனா என்றால் கொடுத்ததாக ஞாபகம். அவ்வாறு ரசீது கொடுத்திருந்தால் பெயர் எழுதி

கொடுப்பேன் என்றால் சாட்சி தற்போது நான் ரசீது கொடுக்கவில்லை. அந்த காலக்கட்டத்தில் நான்  பில் போடவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். பில் கொடுக்காத பட்சத்தில் ஒரு துண்டு வெள்ளை பேப்பரில் தொகை எழுதி கொடுப்பது வழக்கம் என்றால் சரி தான். அவ்வாறு கொடுத்தேனா என்று ஞாபகம் இல்லை. அரசு சம்பந்தமான விஷயம் என்பதால் அதற்கு பில் கொடுப்பது உண்டு என்றால் இந்த வழக்கில் ஞாபகம் இல்லை. நான் எடுக்க பயன்படுத்திய புகைப்பட கருவியை குறித்து போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். நான் சொல்வதுபோல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படம் மற்றும் சி.டி என்னுடைய புகைப்பட கருவியால் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே காவல்துறையினரால் எடுக்கப்பட்ட புகைப்படத்திற்கு என்னை சாட்சியாக காட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.